# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

## காப்பு

### நேரிசை வெண்பா

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | தொல் லை | இரும் பிற விச் | சூ ழுந் | தளை நீக் கி |
| | அல் லல றுத் | தா னந் தம் | ஆக் கிய தே - | எல் லை |
| 2 | மரு வா | நெறி அளிக் கும் | வா தவூர் | எங் கோன் |
| | திரு வா | சக மெனும் | தேன் | |

## நூல்

### கலிவெண்பா

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நமச் சிவா ய | வாஅழ் க | நா தன் | தாள் வாழ் க |
| | இமைப் பொழு தும் | என் நெஞ் சில் | நீங் கா தான் | தாள் வாழ் க |
| 2 | கோ கழி | ஆண் ட | குரு மணி தன் | தாள் வாழ் க |
| | ஆ கமம் | ஆ கிநின் று | அண் ணிப் பான் | தாள் வாழ் க |
| 3 | ஏ கன் | அநே கன் | இறை வன் | அடி வாழ் க |
| | வே கங் | கெடுத் தாண் ட | வேந் தன் | அடி வெல் க |
| 4 | பிறப் பறுக் கும் | பிஞ் ஞகன் தன் | பேய்க் கழல் கள் | வெல் க |
| | புறத் தார்க் குச் | சே யோன் தன் | பூங் கழல் கள் | வெல் க |
| 5 | கரங் குவி வார் | உள் மகி ழுங் | கோன் கழல் கள் | வெல் க |
| | சிரங் குவி வார் | ஓங் குவிக் கும் | சீ ரோன் கழல் | வெல் க |
| 6 | ஈ சன டி | போற் றி | எந் தைய டி | போற் றி |
| | தே சன டி | போற் றி | சிவன் சே வடி | போற் றி |
| 7 | நே யத் தே | நின் ற | நிம லன டி | போற் றி |
| | மா யப் பிறப் | பறுக் கும் | மன் னடி | போற் றி |
| 8 | சீ ரார் | பெருந் துறை நம் | தே வன டி | போற் றி |
| | ஆ ரா த | இன் பம் | அரு ளும் மலைப் | போற் றி |
| 9 | சிவ னவ னென் | சிந் தையுள் | நின் ற | வத னால் |
| | அவ னரு | ளா லே | அவன் தாள் | வணங் கிச் |
| 10 | சிந் தை | மகி ழச் | சிவ புரா ணந் | தன் னை |
| | முந் தை | வினை முழு தும் | ஓ யவு ரைப் | பன் யான் |
| 11 | கண் ணுத லாந் | தன் கரு ணைக் | கண் காட் ட | வந் தெய் தி |
| | எண் ணுதர்க் கு | எட் டா | எழி லார்க் | கழ லிறைஞ் சி |
| 12 | விண் நிறைந் து | மண் ணிறைந்து | மிக் காய் | விளங் கொளி யாய் |
| | எண் நிறைந் து | எல் லை | இலா தா னே | நின் பெருஞ் சீர் |
| 13 | பொல் லா | வினை யேன் | புக ழுமாறு | ஒன் றறி யேன் |
| | புல் லா கிப் | பூ டாய்ப் | புழு வாய் | மர மா கிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | பல் விரு க | மா கிப் | பற வையாய்ப் | பாம் பா கிக் |
| | கல் லாய் | மனி தராய்ப் | பே யாய்க் | கணங் களாய் |
| 15 | வல் லசு ர | ரா கி | முனி வராய் | தே வராய்ச் |
| | செல் லா து | நின் ற | இத் தா வரச் | சங் கமத் துள் |
| 16 | எல் லாப் | பிறப் பும் | பிறந் திளைத் தேன் | எம் பெரு மான் |
| 17 | மெய் யே வுன் | பொன் னடி கள் | கண் டின் று | வீ டுற் றேன் |
| | உய் யவென் | னுள் ளத் துள் | ஓங் கா ர | மாய் நின் ற |
| 18 | மெய் யா | விம லா | விடைப் பா கா | வே தங் கள் |
| | அய் யா | வென வோங் கி | ஆழ்ந் தகன் ற | நுண் ணிய னே |
| 19 | வெய் யாய் | தணி யாய் | இய மா ன | னாம் விம லா |
| | பொய் யா | யின வெல் லாம் | போ யக ல | வந் தரு ளி |
| 20 | மெய்ஞ் ஞா ன | மா கி | மிளிர் கின்ற | மெய்ச் சுட ரே |
| 21 | எஞ் ஞா ன | மில் லா த | இன் பப் | பெரு மா னே |
| | அஞ் ஞா னந் | தன் னை | அகல் விக் குந் | நல் லறி வே |
| 22 | ஆக் கம ளவு | இறு தியில் லாய் | அனைத் து | உல கும் |
| 23 | ஆக் குவாய் | காப் பாய் | அழிப் பாய் | அருள் தரு வாய் |
| | போக் குவாய் | என் னைப் | புகு விப் பாய் | நின் தொழும் பின் |
| 24 | நாற் றத் தின் | நே ரியாய் | சே யாய் | நணி யா னே |
| | மாற் றம் | மனங் கழி ய | நின் ற | மறை யோ னே |
| 25 | கறந் தபால் | கன் னலோ டு | நெய் கலந் தாற் | போ லச் |
| | சிறந் தடி யார்ச் | சிந் தனை யுள் | தே னூ றி | நின் று |
| 26 | பிறந் தப் | பிறப் பறுக் கும் | எங் கள் | பெரு மான் |
| | நிறங் களோர் | ஐந் துடை யாய் | விண் ணோர் | களேத் த |
| 27 | மறைந் திருந் தாய் | எம் பெரு மான் | வல் வினை யேன் | தன் னை |
| | மறைந் திட | மூ டிய | மா ய | இரு ளை |
| 28 | அறம் பா வ | மென் னும் | அருங் கயிற் றால் | கட் டிப் |
| | புறந் தோல் | போர்த் துமெங் கும் | புழு வழுக் கு | மூ டி |
| 29 | மலன் சோறும் | ஒன் பது | வா யிற் | குடி லை |
| | மலங் கப் | புல னைந் தும் | வஞ் சனை யைச் | செய் ய |
| 30 | விலங் கு | மனத் தால் | விம லா | உனக் குக் |
| | கலந் தன் | பா கிக் | கசிந் து | உள் ளுரு கும் |
| 31 | நலந் தா | னிலா த | சிறி யேற் கு | நல் கி |
| | நிலந் தன் மேல் | வந் தரு ளி | நீள் கழல் கள் | காட் டி |
| 32 | நா யிற் | கடை யாய்க் | கிடந் த | அடி யேற் குத் |
| | தா யிற் | சிறந் த | தயா வா னத் | தத் துவ னே |
| 33 | மா சற் ற | சோ தி | மலர்ந் த | மலர்ச் சுட ரே |
| | தே சனே | தே னா | ரமு தே | சிவ புர னே |
| 34 | பா சமாம் | பற் றறுத் துப் | பா ரிக் கும் | ஆ ரிய னே |

| | | | | |
|---|---|---|---|---|
| 35 | நேசவ ருள் | புரிந் து | நெஞ் சில் | வஞ் சங் கெடப் |
| | பேரா து | நின் ற | பெரும் கரு ணைப் | பேரா றே |
| | ஆரா | அமு தே | அள விலாப் | பெம் மா னே |
| 36 | ஓரா தார் | உள் ளத் | தொளிக் கும் | ஒளி யா னே |
| | நீராய் | உரு கியென் | ஆரு யிராய் | நின் றா னே |
| 37 | இன்பமும் | துன்பமும் | இல் லா னே | உள் ளா னே |
| | அன்பருக் கு | அன்பனே | யா வையு மாய் | அல் லையு மாய் |
| 38 | சோதியனே | துன் னிரு ளே | தோன் றாப் | பெரு மையனே |
| | ஆதியனே | அந் தம் | நடு வா கி | அல் லானே |
| 39 | ஈர்த்தென் னை | ஆட் கொண் ட | எந் தை | பெரு மா னே |
| | கூர்த்தமெய் | ஞா னத் தால் | கொண் டுணர் வார் | தம் கருத் தின் |
| 40 | நோக்கரிய | நோக்கே | நுணுக் கரிய | நுண் ணுணர்வே |
| | போக்கும் | வர வும் | புணர் வுமி லாப் | புண் ணியனே |
| 41 | காக்குமெம் | காவல னே | காண் பரி யப் | பே ரொளி யே |
| 42 | ஆற்றின் ப | வெள் ளமே | அத் தா மிக் | காய் நின் ற |
| | தோற்றச் | சுட ரொளி யாய் | சொல் லா த | நுண் ணுணர் வாய் |
| 43 | மாற்றமாம் | வைய கத் தின் | வெவ் வே றே | வந் தறி வாம் |
| | தேற்றனே | தேற்றத் | தெளி வே என் | சிந் தனை யுள் |
| 44 | ஊற்றா ன | உண் ணா | ரமு தே | உடை யா னே |
| | வேற்று | விகா ர | விடக் குடம் பின் | உட் கிடப் பே |
| 45 | ஆற்றேன் | எம் மய் யா | அர னே யோ | வென் றென் று |
| | போற்றிப் | புகழ்ந் திருந் து | பொய் கெட் டு | மெய் யா னார் |
| 46 | மீட் டிங் கு | வந் து | வினைப் பிற வி | சா ரா மே |
| 47 | கள்ளப் | புலக் குரம் பைக் | கட் டழிக் க | வல் லா னே |
| | நள்ளிரு ளில் | நட் டம் | பயின் றா டும் | நா தனே |
| 48 | தில்லையுள் | கூத் தனே | தென் பாண் டி | நாட் டா னே |
| | அல்லல் | பிற வி | அறுப் பா னே | ஓ வென் று |
| 49 | சொல்லற் கு | அரி யா னைச் | சொல் லித் | திரு வடிக் கீழ் |
| | சொல்லிய | பாட் டின் | பொரு ளுணர்ந் து | சொல் லுவார் |
| 50 | செல்வர் | சிவ புரத் தின் | உள் ளார் | சிவ னடிக் கீழ் |
| | பல்லோ ரும் | ஏத் தப் | பணிந்து | |

முற்றும்

## நூல் மற்றும் ஆசிரியர் குறிப்பு

கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து.

மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவராவர். முன்னைய மூவரும் தேவாரம் பாடியிருக்க இவர் பாடிய நூல்களாவன: திருவாசகமும், திருக்கோவையாருமாகும். இவர் 9 ஆம் நூற்றாண்டில் வரகுண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலையமைச்சராக பணியாற்றினார்.

மாணிக்கவாசகர், சிறந்த சிவபக்தரான இரண்டாம் வரகுணன் (863-911) காலத்தில் வாழ்ந்தவர்.

இவர் பாடிய பாடல்கள் "திருவாசகம்" என அழைக்கப்படுகின்றன. பக்திச் சுவையும், மனதை உருக்கும் தன்மையும் கொண்ட திருவாசகப் பாடல்கள், தமிழில் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்து எண்ணப்படுகின்றது. தமிழ் கற்ற மாணவனான ஜி.யூ.போப் இதற்கு தக்க சான்றாகும். "சிறை பெறா நீர் போல் சின்தை வாய்ப் பாயும் திருப்பெருந்துறையுறை சிவனே" என்பதாலும், "இமைப் பொழுதும் என் னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க." எனும் அடிகளால் தமிழின் அருட் திறத்தையும், வாதவூரரிற்கும் இறைவனுக்குமான நெருக்கத்தையும் உணரலாம். "நரியைக் குதிரைசெய்" எனும் திருநாவுக்கரசர் பாடல் மூலம் இவர் காலத்தால் அப்பருக்கு முந்தியவர் என கருதப்படுகிறது.

ஞான நெறியைப் பின்பற்றிய இவர் 32 ஆண்டுகளே வாழ்ந்து ஆனி மகத்தில் சிதம்பரத்தில் சாயுச்சிய முக்கியடைந்தார் (சிவனடி சேர்ந்தார்).

இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், தென்னவன் பிரமராயன் என்ற பெயர்களும் உண்டு.

### வரலாறு

தல புராணத்திலிருந்து திரட்டிய தகவல்களாக அபிதான சிந்தாமணி கூறுவது: "திருவாதவூரார் பாண்டிய நாட்டில் சம்புபாத சரிதருக்கும், சிவஞானவதிக்கும் மகனாகப் பிறந்தார். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து, மன்னன் அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராகப் பதவி அமர்ந்தார் அரிமர்த்தன பாண்டியன் மதுரையை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டுவந்தான். தன் புலமையால் "தென்னவன் பிரம ராயன்" எனும் பட்டத்தையும் பெற்றார்.

உயர்ந்த பதவி, செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்தபோதும் இவை வாழ்வின் இறுதி நோக்கமல்ல என்பதை உணர்ந்த திருவாதவூரார் சைவசித்தாந்தத்தை ஆராய்ந்து சிவ வழிபாடு மேற்கொண்டு ஒழுகி வரலானார்.

## நரியைப் பரியாக்கியது

ஒருமுறை மன்னனுக்குச் சோழநாட்டில் நல்ல குதிரைகள் வந்திருக்கின்றன என்று கேள்விப்பட்டு, அமைச்சர் மாணிக்கவாசகரிடம் பொன் கொடுத்து, அந்தக் குதிரைகளை வாங்கி வரும்படிப் பாண்டிய மன்னன் பணித்தான்.

மாணிக்கவாசகர் பொன்னோடு திருப்பெருந்துறையை (அறந்தாங்கி அருகே இருக்கும் ஆவுடையார் கோவில்) அடைந்தார். அங்கே இருந்த குருந்த மரத்தின் அடியில் சிவபெருமானே குருவடிவு எடுத்து அமர்ந்திருந்தார். அவர்முன் சென்று மாணிக்கவாசகர் பணிந்தார். குருவின் திருக்கரத்தில் இருப்பது என்னவென்று மாணிக்கவாசகர் கேட்க, அவர் சிவஞான போதம் என்றார்.(இது மெய்கண்டார் எழுதிய "சிவஞான போதம் அல்ல)

'சிவம் என்பதும், ஞானம் என்பதும், போதம் என்பதும் யாது? அடியேனுக்கு இவற்றைப் போதித்தால் நான் உமது அடிமையாவேன்' என்றார் பக்குவமடைந்திருந்த மாணிக்கவாசகர். சிவஞானத்தை அவருக்கு போதித்து, திருவடி தீட்சையும் கொடுத்தார் குருமூர்த்தி வடிவத்தில் வந்த சிவபிரான்.

தன் மந்திரிக் கோலத்தை அகற்றிக் கோவணம் பூண்டு, வாய்பொத்திக் குருவின் முன் வாய்பொத்தி நின்ற மாணிக்கவாசகரை, அவருடன் வந்த அரசனின் சிப்பந்திகள் அழைத்தனர். உடன் செல்ல மறுத்துவிட்டார் மாணிக்கவாசகர்.

பாண்டியன் ஒற்றர்களிடம் திருமுகம் (அரசனின் ஆணை தாங்கிய ஓலை) கொடுத்துக் கையோடு மாணிக்கவாசகர் அழைத்துவரக் கட்டளையிட்டான்.

'குருமூர்த்தியின் திருமுகம் கண்ட கண்ணால் வேறொரு திருமுகம் காண்பதில்லை' என்று கூறி மாணிக்கவாசகர் அதனைக் குருவிடமே கொடுத்துவிட்டார். அதைப் படித்த குருமூர்த்தி, ஒரு மாணிக்கக் கல்லை ஒற்றர் கையில் கொடுத்து 'குதிரைகள் வர நல்ல நாளில்லை. ஆவணிமாத மூல நட்சத்திர நாளன்று மதுரைக்குக் குதிரைகள் வந்து சேருமென்று போய்ச் சொல்' என்று அரசனிடம் திருப்பி அனுப்பினார்.

சொன்ன நாளும் அருகில் வந்துகொண்டிருந்தது. ஆனால் குதிரைகள் வருவதாகக் காணோம். மன்னனுக்குக் கோபம் வந்தது. மீண்டும் ஒற்றர்களிடம் குதிரைகள் இருக்குமிடத்தை அறிந்துகொண்டு வரச்சொல்லி அனுப்பினான். அவர்கள் 'எங்குமே குதிரைகள் தென்படவில்லை' என்ற செய்தியோடு திரும்பினர்.

ஆவணி மூலமும் வந்தது. குதிரைகள் வரவில்லை. 'இன்றைக்குள் குதிரைகள் வராவிட்டால் உம்மை வெயிலில் நிறுத்துவேன்' என்று கூறிப் பாண்டிய மன்னன் மாணிக்கவாசகரை எரிக்கும் வெய்யிலில் நிறுத்தினான். அதற்கும் மாணிக்கவாசகர் அசையவில்லை. இரும்புக் கிட்டியால் இறுக்கினர். மாணிக்கவாசகர் சிவனை தஞ்சம் அடைந்தார்.

உடனே சிவபெருமானின் சிவகணங்களை குதிரை வீரர்களாகவும், நரிகளைக் குதிரைகளாகவும் மாற்றி மதுரைக்கு அனுப்பி, தாமே அதற்குத் தலைவராக நடத்தி வந்தார். இதனாலே இறைவனுக்கு பரிமேலழகர் எனும் கரணியப் பெயர் ஏற்பட்டது. ஏராளமான உயர் ரகக் குதிரைகள் மதுரையை நோக்கி வரும் செய்தியை ஒற்றர்கள் மன்னனுக்குச் சொல்லவே அவன் மகிழ்ந்து அமைச்சரைப் போற்றினான்.

குதிரை அணிவகுப்புத் தலைவன் அரசனிடம் குதிரைகளை முன்னும் பின்னும் நடத்தி, அவற்றின் உறுப்புச் சிறப்பைக் கூறி, 'இவை உன்னுடையவை' என்று கூறி ஒப்படைத்தான். விலைகூடிய பீதாம்பரம் ஒன்றை அரசன் அவனுக்குப் பரிசாக அளித்தான். அவனோ அதைத் தன் சவுக்கினால் வாங்கி, குதிரையின் மேல் போட்டுவிட்டு விடைபெற்றான்.

அன்றிரவே குதிரைகள் மீண்டும் நரியாக மாறி, முதலில் அந்தக் கொட்டடியில் இருந்த குதிரைகளையும் கடித்துவிட்டு ஓடின. இதை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் மிகவும் கோபம் கொண்டான். கொடுத்த பொன்னையெல்லாம் திருப்பித் தரும்வரை திருவாதவூராரை வைகையாற்று சுடுமணலில் நிறுத்தி வைக்குமாறு கூறினான்.

### வைகை வெள்ளமும் வந்தியும்

சிவபெருமானுக்கு அடியவரின் துன்பம் பொறுக்கவில்லை. கங்கையை வைகையில் பெருக்கெடுக்கச் செய்கிறார்.கரையை உடைத்துக்கொண்டு ஆறு பெருக்கெடுக்கத் தொடங்கிவிட்டது.

உடனே பாண்டியன் வீட்டுக்கு ஓர் இளைஞன் வந்து கரையை அடைக்கவேண்டும் என்று முரசு அறைவிக்கிறான். வந்திக் கிழவி எனும் ஒரே ஒருவள் மட்டும் வீட்டிலும் யாருமில்லாமலும், ஏவலாளரும் இல்லாமல் யோசித்துக் கொன்டிருக்கையில் சிவபெருமானே ஓர் இளைஞன் வடிவில் வந்தியிடம் வந்து வேலை செய்யட்டுமா என்று கேட்கிறார். "செய், ஆனால் நான் கூலியாக உதிர்ந்த பிட்டு மட்டுமே தருவேன்" என்று வந்தி கூறுகிறாள். அதற்கு உடன்பட்ட சிவபெருமான் தனது 'வேலையைத்' தொடங்குகிறார்.

அன்றைக்குப் பார்த்து வந்திக்கு எல்லாப் பிட்டும் உதிர்ந்து போகிறது. இளைஞன் மூக்கு முட்டச் சாப்பிட்டுவிட்டு, மரநிழலில் துண்டை விரித்துத் தூங்குகிறான். மன்னன் வந்து பார்க்கிறான். கரையில் மற்றவர் பங்குகள் அடைபட்டிருக்கின்றன. வந்தியின் பகுதி உடைந்தே கிடக்கிறது.

கோபம் கொண்ட அரசன் கூலியாளைப் பிரம்பால் அடித்தான். கூலியாளோ ஒரு கூடை மண்ணை உடைப்பில் கொட்ட, அது மாயமாகச் சரியாகிவிட்டது. அவன் மறைந்து போனான். ஆனால் அவன் மீது பட்ட பிரம்படி உலகெல்லாம் உள்ள அனைத்து உயிர்களின் மேலும், கருவில் இருந்த குழந்தை மீதும், படவே பாண்டியன் கலங்கிப் போனான்.

அப்போது சிவபிரானின் குரல் அசரீரியாய் கேட்டது, 'மன்னவா! வாதவூராரின் பொருட்டு இத்திருவிளையாடலை நாம் செய்தோம். இதனை அறியாது நீ கோபம் கொண்டாய்' என்று

அக்குரல் சொல்லிற்று. மன்னன் மீண்டும் வாதவூரடிகளைத் தனக்கு மந்திரியாக இருக்க வேண்டினான். அவருக்கு அந்த ஆசை சிறிதும் இல்லாமையால், சிவத்தலங்களுக்குச் சென்று பாடித் துதித்துப் பின் திருச்சிற்றம்பலம் எனப்படும் சிதம்பரத்துக்கு வந்தார்.

### இறைவன் எழுதியவை

சிதம்பரத்திலும் சிவபிரான் மாணிக்கவாசகர் முன்னர் ஒரு வேதியர் போல வந்தார். அவரை வரவேற்று வணங்கி 'தாங்கள் யாரோ?' என்று வாதவூரார் கேட்டார்.

'நான் பாண்டி நாட்டைச் சேர்ந்தவன். உமது புகழைக் கேட்டு நீர் பாடிய பதிகங்களை ஓத வந்தேன்' என்று அந்தணர் கூறினார்.

'நான் சொல்கிறேன், நீர் அவற்றை எழுதும்' என்று கூறினார் திருவாதவூரார்.

அதற்கு ஒப்புக்கொண்ட அந்தணர் பலப்பல செய்யுட்களை எழுதி முடித்தார். இறுதியில் திருச்சிற்றம்பலமுடையார் மீது ஒரு கோவைப் பிரபந்தம் பாடவேண்டும் என்று வேண்டினார். வாதவூரடிகளும் பாடி முடித்தார்.

முடித்ததும், ஓலைச்சுவடியின் முடிவில் 'மாணிக்கவாசகன் சொற்படி அம்பலவாணன்' என்று கையொப்பமிட்டு, திருமுறையைக் கோவிலின் திருவாயிற்படியில் வைத்து மறைந்தார். அதைப் பார்த்த ஒருவர் அவ்வேடுகளை எடுத்துப் பார்க்க, அது திருவாசகமும், திருக்கோவையும் கொண்ட சுவடியாய் இருந்தது. மிகவும் மனம் மகிழ்ந்த அவர் தில்லை மூவாயிரவரைக் கூட்டிப் பூசைகள் செய்தார். மூவாயிரவர் நடந்த நிகழ்ச்சிகளின் பொருள் என்ன என்று வாதவூராரைக் கேட்டனர். அவர்கள் அனைவரையும் திருச்சிற்றம்பலத்துக்கு அழைத்துச் சென்ற வாதவூரார் பொருள் இதுவே என்று கூறித் தில்லையம்பலத்தைக் காட்டி மறைந்தார்.

### இவரின் படைப்புக்கள்

திருவாசகம், திருக்கோவையார்

### வாழ்ந்த காலகட்டம்

மாணிக்கவாசகர் வாழ்ந்த காலகட்டம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் கி.பி 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டு காலகட்டம் என்றும் இரு வேறு கருத்துகள் உள்ளன.

சுந்தரருக்கு பிற்பட்ட காலத்தவர் என்பது ஆய்வாளர்கள் கருத்து. எனினும் மாணிக்கவாசகர் தேவார மூவருக்கும் முற்பட்டவர் என்றும் சிலர் கருத்துள்ளது.

## அற்புதங்கள்

- சிவபெருமானே நரியைக் குதிரையாக்கிக் கொண்டு வரும்படியும் மண்சுமந்து அடிபடும் படியும் நடந்து கொண்டது.
- பிறவி தொட்டு ஊமையாயிருந்த பெண்ணைப் பேசவைத்தமை.
- தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளி வந்து எழுதும் பேறு பெற்றுக்கொண்டது.
- எல்லாரும் காணத்தக்கதாக திருச்சபையினுள்ளே புகுந்து சிவத்தோடு கலந்தது.

## ஜி. யு. போப் கருத்து

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரான ஜி. யு. போப் மாணிக்கவாசரைப் பற்றி, "உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரை விடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலைத்த பக்தி ஆகிய பண்புகளுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் வேறு யாரும் இல்லை" என்று குறிப்பிடுகின்றார்.

---


நெறியோடுஆய்வு செய்து வெளியிடுவோர்

**இரா. மகேந்திரவர்மன்**
**தமிழாராய்ச்சியாளர்**

+91 9677253304

rmagendravarman@gmail.com



www.muththamizhneri.com

(முத்தமிழ்நெறி.காம்)

-Powered by Lifo Technologies

- இணையவழி ஆய்வுக்கூடம்
- இணையவழி வெளியீட்டகம்
- இணையவழி ஊடகம்
- இணையவழி பயிலகம்
- இணையவழி சங்கம்